பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 05 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – நெதர்லாந்து இடையே பாதுகாப்புத்துறையில் கூட்டுறவால் ஏற்படும் பலன்கள் குறித்து அந்நாட்டு அமைச்சருடன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.

2. ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மூவர்ண தேசியக் கொடி பேரணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

3. தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 13 நாட்களில், ஒரு லட்சத்து 61 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்திருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தின் வட மாவட்டங்களில் அனேக இடங்களிலும், தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை டேபிள் டென்னிஸ் சாம்பியன் இறுதிப் போட்டியில் இந்தியாவின் **Yasashwini Gharpade – Diya Chitale** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நெதர்லாந்து சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Ruben Brekelmans,** வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Casper Veldkamp** ஆகியோரை சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள் மற்றும் சவால்கள் குறித்து கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளின் கூட்டுறவால் ஏற்படும் பலன்கள் குறித்தும் தாம் பேச்சு நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததற்காக நெதர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சரிடம் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டதாகவும், தீவிரவாதத்திற்கு எதிரான ஆதரவுக்கு பாராட்டு தெரிவித்ததாகவும் திரு. ஜெய்சங்கர் அதில் கூறியுள்ளார்.

தொடர்ந்து நெதர்லாந்தில் உள்ள இந்திய சமூகத்தினரையும் சந்தித்து தாம் கலந்துரையாடியதாக திரு. ஜெய்சங்கர் மற்றொரு பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தொழில்நுட்பத் திறனில் உலக அளவில் சிறந்த மாநிலமாக தமிழகத்தை உருவாக்கும் வகையில் மடிக்கணினி வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கல்லூரி மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் பணி குறித்த உயர்நிலைக் குழுக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய திரு. உதயநிதி ஸ்டாலின், தமிழகத்தில் கல்லூரி மாணவர்களின் திறன்களை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தை மாணவர்களிடம் விரைந்து கொண்டு சேர்த்திட அனைத்து அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்று திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கை, தொடங்கப்பட்ட 13 நாட்களில் ஒரு லட்சத்து 61 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்திருப்பதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேற்று மாலை 6 மணி வரை 46 ஆயிரத்து 691 மாணவர்களும், 75 ஆயிரத்து 959 மாணவிகளும் இணையதளம் மூலம் விண்ணப்பித்திருப்பதாக கூறியுள்ளார்.

வரும் 27ஆம் தேதி வரை மாணவர்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்யலாம் என்றும் திரு. கோவி. செழியன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மூவர்ண தேசியக் கொடி பேரணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சென்னை தாம்பரத்தை அடுத்த சேலையூரில் பிஜேபி சார்பில் யாத்திரை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பிஜேபி தேசிய மேலிய இணை பொறுப்பாளர் திரு. சுதாகர் ரெட்டி மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சுதாகர் ரெட்டி, கன்னியாகுமரி முதல் கஷ்மீர் வரை நடைபெற உள்ள இந்த யாத்திரையில் பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புத் துறையின் திறனுக்கும், தயார்நிலைக்கும் கிடைத்த மிகப்பெரிய சான்றாக ஆபரேஷன் சிந்தூர் வெற்றி அமைந்திருப்பதாக திரு. சுதாகர் ரெட்டி கூறினார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகையில் நடைபெறும் ரோஜா மலர்க் கண்காட்சியை நேற்று வரை 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுள்ளனர்.

வரும் 25ஆம் தேதி வரை நடைபெற உள்ள இக்கண்காட்சியை பார்வையிட சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து குவிந்தவண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Sarvanan – 54 sec)

<<<<>>>>

தமிழகத்தின் வட மாவட்டங்களில் அனேக இடங்களிலும், தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தருமபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

தருமபுரியில் பெய்த கனமழையால் பல இடங்களில் மின்சார துண்டிப்பு ஏற்பட்டு பின்னர் சீரடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Dhandapani – 27 sec)

<<<<>>>>

இருவரிச் செய்திகள்

யுக்ரைனில் சண்டைநிறுத்தம் ஏற்படுவது தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினுடன் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள **Flores** தீவில் எரிமலைக் குழம்பு வெளியானதில் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு சாம்பல் படர்ந்ததால் அங்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டின்பேரில் ஹரியானா மாநிலம் **Kanqarka** கிராமத்தைச் சேர்ந்த முகமது தாரிஃப் என்பவரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் 3 நாள் பயணமாக இன்று கோவா செல்கிறார்.

மகாராஷ்டிரா அமைச்சரவையில் புதிதாக சேர்க்கப்பட்ட தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. **Chhagan Bhujbal** இன்று காலை பதவியேற்றுக்கொள்கிறார்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் தொடங்கிய சாரண, சாரணியர் இயக்க பயிற்சி முகாமில் மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்று ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே வாகன சோதனையின்போது போதைப்பொருள் எடுத்து வந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 70 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதேபோல் கன்னியாகுமரி மாவட்டம் எள்ளுவிளை பகுதியில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்ததாக 5 பேரை காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

திருப்பூர் மாவட்டம் கரைப்புதூர் பகுதியில் சாயப்பட்டறை ஆலையின் சாயக்கழிவு தொட்டியில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட 2 தொழிலாளர்கள் விஷவாயு தாக்கி உயிரிழந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் தீயணைப்புத் துறை சார்பில் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர் மீட்பு செயல்முறை பயிற்சி முகாம் நடைபெற்றது.

திருப்பத்தூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் 352 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி உத்தரவிட்டார்.

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை டேபிள் டென்னிஸ் சாம்பியன் இறுதிப் போட்டியில் இந்தியாவின் **Yasashwini Gharpade – Diya Chitale** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-11, 11-6, 11-9 என்ற செட் கணக்கில் சிங்கப்பூரின் **Jian Zeng – Ling Qian** இணையை வென்றது.

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி இன்று கோலாலம்பூரில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் **H.S.** பிரனாய், ஆயுஷ் ஷெட்டி, பிவி. சிந்து, மால்விகா பன்சோட் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

வரும் 25ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெறுகிறது.

ஜெர்மனியின் **Suhl** நகரில் நேற்று தொடங்கிய உலகக்கோப்பை இளையோர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Raiza Dillon** தலைமையிலான 57 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

வரும் 26ஆம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>